**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No.410/2022**

**PW - 10**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ராஜா ரணவீரன் ( LW. 11) |
| Father's / Husband Name | : | த/பெ.சின்னசாமி |
| Village | : | சேலம் |
| Taluk | : | சேலம் |
| Calling | : | கூடுதல் காவல் கண்காணிப்பாளர் |
| Age | : | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **10.09.2025** என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. துரைகருணாநிதி, உதவியாளர்.

**(1, 2 எதிரிகள் ஆஜர், 3ம் எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. )**

**(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம். :– மதியம் 01.07 மணி )**

**முதல் விசாரணை:–**

1) நான் ஈரோடு மாவட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியில்இருந்து ஓய்வு பெற்று, தற்போது சேலத்தில் வசித்து வருகிறேன். கடந்த 06.04.2022 ம் தேதி நாமக்கல் வேலூர், உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்த போது வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.45/2022 சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) IPC வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்று காலை 07.00 மணிக்கு சம்பவயிடமான செங்கோடபாளையத்தில் உள்ள எதிரி பழனிசாமி என்பவரின் வீட்டின் முன்பு உள்ள ரோட்டில் சம்பவயிடத்தை சாட்சிகள் செல்வம், ஜெயபிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2) பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். சாட்சிகள் பழனிசாமி, சதீஷ்குமார், ஆறுமுகம், லட்சுமணன், பாப்பாத்தி, சின்னப்பிள்ளை (எ) அத்தாயி, செல்வம், ஜெயபிரகாஷ் ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். 12.04.2022 ம் தேதி பழனிசாமி, சதீஷ்குமார் ஆகியோர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர் நித்ய பிரியாஅவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். பின்னர் முதல்

தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் ஆய்வாளர் ரவிச்சந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னிட்டு புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் குடியிருப்பு பகுதி என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் பழனிசாமி, சதீஷ்குமார் இருவரும் வெளிநோயாளியாக மருத்துவம் பார்த்து வந்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்ற சொன்னால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் பழனிசாமியிடம் 1ம் எதிரியின் மனைவி சாந்தி என்பவர் கோழிப்பண்ணையில்வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். கோழிப்பண்ணையில் வேலையில் இருந்து நின்ற பிறகு தான் இந்த வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 02.04.2022 ம் தேதி 1ம் எதிரியின் மனைவி சாந்தி என்பவர் இவ்வழக்கில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் பழனிசாமி, சதீஷ்குமார் ஆகியோர்கள் மீது வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் குற்ற எண்.46/2022 என வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எதிரிகளுக்கும், இந்த வழககிற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றும், எதிரிகள் எவ்வித குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாந்தி வேலையை விட்டு நின்ற பிறகு மீண்டும் வேலைக்கு வரவேண்டும் என புகார்தாரர் பழனிசாமி கட்டாயப்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல.

3) அந்த முன்விரோதத்தின் காரணமாக தான் 1ம் எதிரியின் வீட்டிற்கு பழனிசாமி, சதீஷ்குமார் ஆகியோர் சென்று மரக்கட்டை, கல் ஆகிய ஆயுதத்தை கொண்டு வீட்டின் கண்ணாடி ஜன்னல்களை உடைத்து சேதப்படுத்திவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரர் சம்பவத்தின் போது எந்த காரில் சென்றார் என்று புகார் வாக்குமூலத்தில் அது குறித்த விவரங்களை சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் பார்வை மகஜர் டைப் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவயிடத்திற்கு மடிக்கணிணியை எடுத்து சென்று அங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்பதை பார்வை மகஜரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றும், சம்பவயிட சாட்சிகளைவிசாரிக்கவில்லை என்றும், வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் வழக்கிற்கு ஏற்றாற்போல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புகார்தாரர் பழனிசாமி மற்றும் சதீஷ்குமார் ஆகியோர் மீது 1ம் எதிரியின் மனைவி சாந்தி புகார் கொடுத்தற்கு பழிதீர்க்கும் விதமாக எதிரிகள் மீது பொய்யான புகார்

கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய்யான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

**விசாரணை முடிவுற்ற நேரம்:– மதியம் 01.23 மணி**